# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1984 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, நவம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60*

*தபாற் செலவு : சதம் 60*

## 1984 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 13/84
1638

### ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமயவைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்.

"ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினரால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்க, சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டு நடாத்துவதற்குமென இதன் முன்னர் பத்தரமுல்லையில் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கமய" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமயவின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவாதல் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்; அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியவாறு அதை மாற்றுவதற்கும் திருத்துவதற்குமான முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். ஜயந்திபுர எக்சத் பௌத்த சங்கமய கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்த நெறிகளை அனுட்டிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் ;

(ஆ) புத்தசமயத்தின் கற்கைக்கும் பரப்புவதற்குமான வசதிகளை ஊக்குவித்தலும் ஏற்படுத்துதலும் ;

1—எ 075168—2,650 (02/84)

(இ) பௌத்தர்களின் ஆத்மீக, பண்பாட்டு முன்னேற்றத்தை மேம் படுத்துதல் ;

(ஈ) பௌத்தர்களிடையே நல்லுறவையும் ஒத்துழைப்பையும் வளர்த் தல் ;

(உ) அரசியல் சம்பந்தப்படாத சமூகச் செயற்பாடுகளுக்கு ஆதரவு கொடுத்தல் ;

(ஊ) பொது சமூகசேவைச் செயற்பாடுகளில் ஈடுபடுதலும் அவற் றுக்கு உதவி புரிதலும் ; அத்துடன்

(எ) புத்த சமயத்தின் நலன்களைப் பாதுகாத்தலும் அவற்றை மேம் படுத்துதலும் ஊக்குவித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனமானது, அதன் குறிக்கோள் களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன் னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்க வாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங் களையும், காரியங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் தத்துவ முடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணம் கடன் பெறுதல் அல்லது திரட்டுதல், இலங்கையிலுள்ள அல்லது வேறுநாடுகளிலுள்ள கொடையாளர்களிடமிருந்து மானியக் கொடைகளையும் நன்கொடை களையும் பெறுதல் அல்லது சேகரித்தல் அதன் நிதிகளை முதலீடு செய்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போது வலுவிலுள்ளன வான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, முகாமைச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கும் சங்கமயவின் முகாமைச் சபை உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் வாக்குப் பெரும்பான்மை கொண்டும் உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகு தல் அல்லது அவர்களை நீக்குதல் என்பனவற்றுக்காகவும், முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற் காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும், அத்துடன் வேறுவகையில் பொது வாக அதன் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்திற்குக் காலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராத விதிகளை ஆக்கு தல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள்

ஆக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதும் (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய அதேபோன்ற கூட்டமொன்றில் அவை அதே முறையில் மாற்றப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ளவையான கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் அல்லது இதன்பின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிறைவேற்றப்படக் கூடிய விதியெதுவும் கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குகளைக் கொண்டன்றி மாற்றப்படவோ, அவற்றிற்குச் சேர்க்கப்படவோ, அது திருத்தப்படவோ அல்லது இல்லாதொழிக்கப்படவோ ஆகாது.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் வலுவிலுள்ள சங்கமயவின் விதிகள் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் யாவரும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

சங்கமயவிடம் இருந்து போமதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.

7. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கமயவுக்குள்ள எல்லாத்தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சங்கமயவுக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைச் சபையின் இரு உறுப்பினரின் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை ஒப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராக ஒப்பமிடுவதற்குத் தனிவேறானதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம் என்பது.

9. கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைய—

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், வைத்திருக்கவும், (அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.)

(ஆ) அவற்றை விற்க, ஈடு வைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள,

கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டும்.

கடன் பெறும் அதிகாரங்கள்.

**10.** கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக நிதியைத் திரட்டுதல் அத்துடன் அந்நோக்கத்திற்காக எவையேனும் ஈடுகளை, முறிகளை, கடப்பாடுகளை உருவாக்குதல், நிறைவேற்றுதல், கொடுத்தல் அல்லது வழங்குதல் என்பன கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு திரட்டப்படும் தொகையின் கூட்டுமொத்தம் முகாமைச் சபையினால் அந்நோக்கத்திற்கென தீர்மானிக்கப்படும் பணத்தொகையை விஞ்சுதலாகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**11.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களிலிருந்து, அவர்கள் மூலம் அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*